# DEPOSITION OF WITNESS

## In the Court of the Principal District Judge, Tiruchirappalli.

## Sessions Case No. 180/2024

Prosecution Witness No. PW1

Chapter XXIII Code of Criminal Procedure

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name / பெயர் | : | **கலைச்செல்வி** | Caste / இனம் | : | |
| Father's/ Husband's Name தகப்பனார்/கணவர் பெயர் | : | | Calling / வேலை | : | |
| Village / கிராமம் | : | | Religion / மதம் | : | |
| Taluk / வட்டம் | : | | Age / வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 04.07.2025.

(Accused Present)

**முதல் விசாரணை** :

நான் பெருமாள்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி என் கணவர். ஆஜர் எதிரி என் கொழுந்தனார். எனக்கு இரண்டு மகன், ஒரு மகள். என் கணவர் விவசாய வேலை செய்து வந்தார். எங்கள் குடும்பத்திற்கும் கொழுந்தனார் குடும்பத்திற்கும் கடந்த 18 வருடங்களாக வயல் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. ஒவ்வொரு முறையும் ஊரில் பஞ்சாயத்து பேசி சமாதானமாவோம். பின்னர், மீண்டும் பிரச்சனை நடக்கும். ஒவ்வொரு முறையும் எதிரி என்னைக்கு இருந்தாலும் உன் சாவு என் கையில்தான் என்று சொல்லுவார். 11.03.2024–ஆம் தேதி என் கணவர் தோட்டத்திற்கு சென்று பால் கறந்து, பால் பண்ணையில் ஊற்றிவிட்டு ரெங்கநாபுரம் சந்தையில் வீட்டிற்கு தேவையானவற்றை வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வரும்பொழுது இரவு 7.15 மணியளவில், அன்பு பீட்டர் ../

வீட்டிற்கு அருகே எதிரி வழிமறித்து தகராறு செய்ததாக சரண்யா என்பவர் எனக்கு போன் செய்து சொன்னார். எதிரியின் கையில் கொடுவா இருந்ததாகவும், என் கணவர் கையில் எதுவும் இல்லை என்றும், உடனே கிளம்பி வா என்றும் சொன்னார். நானும் என் மகளும்தான் வீட்டில் இருந்தோம். இருவரும் பதறி அடித்துக்கொண்டு ஓடிவந்தோம். என் கணவர் ஆசாரி வீட்டு சந்தில் ஓடினார். அவர் கால் இடறி கீழே விழுந்துவிட்டார். நாங்கள் சத்தம் போட்டுக்கொண்டிருக்கும்பொழுது எதிரி என் கணவரின் தலை, கழுத்து, வலது கை, தோள்பட்டை, கால் ஆகியவற்றில் வெட்டிவிட்டார். ஓடிவரும் எங்களை பார்த்து உங்களுக்கும் இதே கதிதாண்டி என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். உடனே, நாங்கள் 108–க்கு போன் செய்தோம். ஆம்புலன்ஸ் வந்து பார்த்துவிட்டு பேச்சு, மூச்சு இல்லாமல் கிடக்கிறார்கள் என்று சொன்னார்கள், இறந்துவிட்டார் என்று சொன்னதால், நான் துறையூர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அந்த புகார் அ.த.சா.ஆ.1. புகாரை எழுத சொன்னார்கள், பதட்டத்தில் என்னால் எழுதமுடியவில்லை. நான் சொல்ல சொல்ல என்னுடன் வந்தவர்கள் எழுதினார்கள். நான் அதில் கையெழுத்து போட்டு கொடுத்தேன். ஒரு மணி நேரம், ஒன்றரை மணி நேரம் கழித்து போலீசார் அங்கு வந்தார்கள். பின்னர், பிரேதத்தை அங்கிருந்து அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். சாட்சி கொடுவாளை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியுமா என்று கேட்டபொழுது, அந்த கொடுவாளில் கயிறு கட்டியிருக்கும் என்று சொல்கிறார். பின்னர், சாட்சி கொடுவாளை காட்டி அடையாளம் காட்டினார். அது சா.பொ.ஆ.1.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை :**

நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். பெருமாள்பாளையத்தில் நாயுடு தெரு கிழக்கு மேற்காக செல்லும் சிமெண்ட் சாலை என்று சொன்னால் சரிதான். நான் தற்போது சொன்ன விவரத்தைதான் என் புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த புகாரில் அன்பு பீட்டர் வீட்டருகே எதிரி வழிமறித்து தாக்கியதாக சரண்யா என்னிடம் சொன்னதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நாயுடு தெருவில் மரியதாஸ் காலிமனை, சாமிநாதன் மெத்தை வீடு./

ஆகியவை உள்ளதா என்றால் உள்ளது. சாமிநாதன் மெத்தை வீட்டிலிருந்து 100 மீட்டர் கிழக்காக சென்றால், அந்த தெரு தெற்கு பக்கமாக திரும்பும் என்றால் சரிதான். தெரு திரும்பும் இடத்திலிருந்து தெற்கு பக்கமாக நூறு மீட்டர் தூரத்தில் என் வீடு, என் மாமியார் வீடு, எதிரியின் வீடு, எதிரியின் மாமியார் வீடு அருகருகே உள்ளது என்றால் சரிதான். என் வீட்டிலிருந்து பார்த்தால் ஆசாரி சந்து தெரியாது என்றால் சரிதான். ஆசாரி சந்து என்பது ஒரு மூன்றடி அகலமுள்ள சிறிய சந்து என்றால், ஐந்து அடி பாதை. அந்த பாதை சிமெண்ட் பாதை என்றால் சரிதான். ஆனால், அந்த சமயத்தில் முருகன் வீடுகட்டிக் கொண்டு இருந்ததால் அங்கு மணல், சிமெண்ட், ஜல்லி எல்லாம் கொட்டி கிடந்தது. மரியதாஸ் காலிமனைக்கு வடக்கே முருகன், சிவாஜி வீடு உள்ளது என்றால் சரிதான். அவர்கள் வீட்டோடு அந்த தெரு முடிவடைகிறது என்றால் சரிதான். எங்களுக்கும் எதிரிக்கும் சிக்கத்தம்பூர் ஏரி அருகே அறுபது சென்ட் மற்றும் எழுபது சென்ட் நிலம் தனித்தனியாக இருந்தது என்றால் சரிதான். அந்த நிலத்தில் ஒரு பொது கிணறு உள்ளது என்றால் சரிதான். அந்த கிணற்றிற்கு ஒரு மின்மோட்டார் என் கணவர் பெயரில் இருந்தது என்றால் சரிதான். அந்த மின்மோட்டாரிலிருந்து நீர் இறைப்பது சம்பந்தமாகதான் என் கணவருக்கும் எதிரிக்கும் பிரச்சனை என்றால், அது பிரச்சனை இல்லை. அவ்வாறு பிரச்சனை இருந்ததாக நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த 70 சென்ட் நிலத்திற்கு என் கணவர் தண்ணீர் விடாத காரணத்தினால், சிக்கத்தம்பூர் கிராம தேவேந்திர குல வேளாளர் கோவிலுக்கு எதிரி தானமாக கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். என் மகன் பெயரில் என் மாமியார் சுமார் இரண்டு ஏக்கர் நாற்பது சென்ட் நிலத்தை தானசெட்டில்மென்ட் எழுதிவைத்தார் என்றால், அந்த சொத்தின்மீது என் மாமியார் கடன் வாங்கியிருந்தார், அதை எதிரியை கட்ட சொன்னார், அவர் கட்டாத காரணத்தினால் நாங்கள் கட்டி அந்த சொத்தை என் மகன் பெயருக்கு எழுதி கொடுத்தார். என் கணவர் என் மாமியாரிடம் சொத்தை ஏமாற்றி எழுதிவாங்கிக்கொண்டார் என்றாலும், கடனை அவர் அடைக்கவில்லை என்றாலும் சரியல்ல. 2007–ஆம் வருடம் எதிரியையும், எதிரியின் மாமியார் சரோஜாவையும் என் கணவர் வெட்டிவிட்டார் என்று, துறையூர் காவல்நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த ../

வழக்கில் என் கணவருக்கு இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை கொடுத்தார்களா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த தண்டனை மாவட்ட நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால், அவர் சிறையிலிருந்த விவரம் எனக்கு தெரியும். என் கணவர் அறுபது நாள் ஜெயிலில் இருந்தார் என்றால் சரிதான். பின்னர், உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்தபோது, ஏற்கனவே சிறையில் இருந்த காலத்தை தண்டனை காலமாகவும், மேலும் நஷ்ட ஈடாக ரூபாய் ஐம்பதாயிரத்தை எதிரியின் மாமியாருக்கு கொடுக்க வேண்டும் என்றும் தீர்ப்பானது என்றால் சரிதான். அந்த தகராறில் எதிரியின் மாமியாருக்கு இடது கையில் மூன்று விரல்கள் துண்டாகிவிட்டது என்றால் சரிதான். எதிரி லாரி டிரைவராக வேலை செய்கிறார் என்றால் சரிதான். அவருக்கு ஒரு மகன், ஒரு மகள் என்றால் சரிதான். அவருக்கு விவசாய நிலங்கள் எதுவும் தற்போது இல்லை என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தார் சுமார் ஐந்தரை ஏக்கர் நிலத்தை விவசாயம் செய்கிறோம் என்றால் சரிதான். அன்றைய தினம் என் கணவர் சந்தைக்கு போய் காய்கறி, மளிகை வாங்கிவந்தார் என்றால் சரிதான். என் கணவர் அந்த இடத்தில் வெட்டுபட்டு கிடக்கிறார் என்று கேள்விப்பட்டுதான் அங்கு சென்றேன் என்றால் சரியல்ல, துரத்துவதை கேள்விப்பட்டு சென்றேன். நான் என் கணவரை எந்த இடத்தில் பார்த்தேன் என்றால், அன்பு வீட்டிற்கு முன்பு ஓடிக்கொண்டிருந்தபொழுது பார்த்தேன். நான் சண்டையை தடுக்க முயற்சி செய்தேனா என்றால் முயற்சி செய்தேன். நாயுடு தெரு, இரண்டு பக்கமும் நெருக்கமாக வீடு உள்ள தெரு என்றால் சரிதான். அன்றைய தினம் அனைவரும் வீட்டில்தான் இருந்தார்கள் என்றால், யாரும் வீட்டிற்கு வெளியே இல்லை. என் கணவர் ஓடிப்போகும்பொழுது குப்புர விழுந்தார் என்றால் சரிதான். சம்பவம் பத்து நிமிடத்தில் முடிந்துவிட்டது. என் கணவருக்கு செருப்பு போடும் பழக்கம் இல்லை. இச்சம்பத்திற்கு பிறகு எதிரி ஆசாரி தெரு முக்கத்தில் உட்கார்ந்திருந்தார் என்றால் இல்லை. ஆம்புலன்ஸ்-க்கு நான்தான் தகவல் கொடுத்தேன். பத்து நிமிடத்தில் ஆம்புலன்ஸ் வந்துவிட்டது. ஆம்புலன்ஸ் வந்த சிறிது நேரத்தில் போலீசாரும் அங்கு வந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் காவல்நிலையம் சென்று 8.30 மணிக்கு புகார் கொடுத்த பின்புதான் வந்தார்கள். முதலில் வந்த ஆம்புலன்ஸ் போலீசார் வரும்வரை அங்கே இருந்ததா என்றால் இருந்தது. ../

காவல்நிலையத்திற்கு என்னுடன் ஊர்க்காரர்கள் நான்கு பேர் வந்தார்கள். காவல்நிலையத்திற்கு என்னை காரில் அழைத்துச் சென்றார்கள். காரில் நான் மட்டும்தான் சென்றேன். புகாரை கிஷோர்குமார் என்பவர் எழுதினார். அவர் என் மகன் தான். என் பெரிய மகன் தனீஷ்குமார் அங்கிருந்தாரா என்றால், நாங்கள் போன் செய்து வரசொன்ன பிறகு சம்பவ இடத்திற்கு எட்டு மணிக்கு வந்தார். அன்றைய தினம் தனீஷ்குமாரும் என்னுடன்தான் இருந்தார் என்றால் சரியல்ல. சாட்சி சரண்யாவிற்கு என் கணவர்தான் காதல் திருமணம் செய்துவைத்தார் என்றால் சரிதான். அதனால், சரண்யா குடும்பத்தார் எங்கள் குடும்பத்துடன் நெருக்கமாக பழகுவார்கள் என்றால் பேசிக்கொள்வார்கள். நாங்கள் குடியிருக்கும் தெருவில் சரண்யா வீடு இல்லை என்று சொன்னால் சரிதான். அவர் வீடு துறையூரிலிருந்து நரசிங்கபுரம் செல்லும் சாலையில் மேற்குபுறம் உள்ளது என்றால் சரிதான், நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் சம்பவ இடத்தில், நான் இல்லை என்றாலும், நான் சொன்னதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. அன்றைய தினம் எதிரிக்கும் தலையில் காயம் இருந்ததா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவ இடத்திலிருந்து போலீசார் இரவு 9.45 மணிக்கு பிரேதத்தை எடுத்துச் சென்றார்கள். அதன்பிறகு, நானும் துறையூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் சென்றேன். துறையூர் அரசு மருத்துமனையிலும் போலீசார் இருந்தார்கள் என்றால் சரிதான். மருத்துவமனையில் என்னை போலீசார் விசாரித்து எழுதி கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். மறுநாள் என்னை காவல்நிலையத்திற்கு வர சொல்லவில்லை. அதன்பிறகு, போலீசார் என்னை விசாரிக்கவில்லை. அன்றைய தினம் என் கணவர் ஓட்டிவந்த வண்டி சம்பவ இடத்தில்தான் நின்றுகொண்டிருந்தது என்றால் சரிதான். என் கணவர் வாங்கி வந்த மளிகை ஜாமான் அந்த வண்டியில்தான் இருந்தது என்றால் சரிதான். காய்கறிகள் அங்கு சிதறி  கீழே கிடந்தது. வண்டியும் அங்கு கீழே கிடந்தது. போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து கீழே கிடந்த வண்டி, காய்கறி ஆகியவற்றை பார்த்தார்கள், என் கணவர் ஓட்டி வந்த வாகனத்தை காவல்நிலையம் எடுத்து சென்றுவிட்டார்கள். பத்து நாட்கள் கழித்து எங்கள் வண்டியை வாங்கி வந்தோம். போலீசார் எழுதி கொடுத்த புகாரில் கையொப்பம் செய்துவிட்டு, போலீசார் சொல்லிகொடுத்தபடி சாட்சியம் ../

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல்விசாரணையில் சொன்னதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/– M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

DEPOSITION OF WITNESS

**In the Court of the Principal District Judge, Tiruchirappalli.**

**Sessions Case No. 180/2024**

Prosecution Witness No. PW2

Chapter XXIII Code of Criminal Procedure

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name / பெயர் | : | சுபநந்தினி | Caste / இனம் | : | |
| Father's/ Husband's Name தகப்பனார்/கணவர் பெயர் | : | | Calling / வேலை | : | |
| Village / கிராமம் | : | | Religion / மதம் | : | |
| Taluk / வட்டம் | : | | Age / வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 04.07.2025.

(Accused Present)

**முதல் விசாரணை** :

நான் பெருமாள்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். வழக்கில் இறந்துபோனவர் என் தகப்பனார். அ.த.சா.1 என் தாயார். ஆஜர் எதிரி என் சித்தப்பா. 11.03.2024 அன்று நானும், என் தாயாரும் வீட்டில் இருந்தோம். மாலை 7.15 மணி அளவில் என் ஊரில் இருக்கும் சரண்யா என்பவர் என் அம்மாவிற்கு போன் செய்து, என் அப்பாவை என் சித்தப்பா கொடுவாளை வைத்து விரட்டிக்கொண்டிருப்பதாக சொன்னார். நானும் அம்மாவும் ஓடிவந்து பார்த்தோம். அப்பொழுது, எதிரி கொடுவாளுடன் என் அப்பாவை விரட்டிகொண்டுவந்தார். என் தகப்பனார் ஆசாரி சந்திற்குள் ஓடினார். கால் தவறி கீழே விழுந்துவிட்டார். விழுந்த நபர்மீது கை, கால், தலையில் வெட்டிவிட்டார். நாங்கள் அருகில் சென்றபோது எங்களை பார்த்து காப்பாற்ற வருகிறீர்களா உங்களுக்கும் ../

இதுதான் கதி என்று எங்களையும் துரத்தினார். நாங்கள் பயந்துகொண்டு சிறிது தூரம் ஓடிவிட்டோம். பின்னர், எதிரி என் அப்பா அருகே ஓடி சென்று நின்றுகொண்டார். பின்னர், 108–க்கு கால் செய்தோம். அவர்கள் வந்து என் அப்பா இறந்துவிட்டதாக சொன்னார்கள். பின்னர், என் அம்மா காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார். பின்னர் போலீசார் வந்தார்கள் அதன்பின்னர், ஆம்புலன்ஸ் வந்து என் அப்பாவை ஏற்றிச் சென்றது. என் அப்பாவை வெட்டுவதை எங்கள் ஊர்க்காரர்கள் வீடியோ எடுத்திருந்தார்கள், அந்த வீடியோவை தற்போதுதான் எங்கள் ஊர்க்காரர்கள் எனக்கு அனுப்பினார்கள். அந்த வீடியோ என்னுடைய மொபைலில் உள்ளது. என் அண்ணன் தனீஷ்குமாருக்கும் அனுப்பியுள்ளார்கள். அந்த வீடியோ பெருமாள்பாளையம் என்ற ஒரு குரூப் உள்ளது, அதில் அந்த வீடியோ பகிரப்பட்டதாக சொன்னார்கள். அதை யார் எடுத்தார்கள் என்று பயந்துகொண்டு சொல்லமாட்டேன் என்று சொல்கிறார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் கொடுவாளைதான் அன்றைய தினம் எதிரி வைத்திருந்தார். அது சா.பொ.ஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை :</u>

தற்போது நான் முதல்விசாரணையில் சொன்னதைதான் போலீஸ் விசாரணையிலும் சொன்னேன். என் அப்பாவை வெட்டிவிட்டு எதிரி என் அப்பா அருகே சென்று நின்றுகொண்டார் என்ற விவரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். போலீசார் வரும்வரை எதிரி என் அப்பா பிரேதம் அருகேதான் நின்றுகொண்டிருந்தார் என்றால் சரியல்ல. சுமார் ஒரு இருபது நிமிடம் நின்று இருப்பாரா என்றால் அரைமணிநேரம் நின்றிருப்பார். எதிரி அங்கு இருந்தபொழுதே ஆம்புலன்ஸ் அங்கு வந்தது என்றால் சரிதான். எதிரிக்கும் தலையில் காயம் இருந்தது என்றால் சரிதான். ../

அதிலிருந்து ரத்தம் வந்தது என்றால் சரிதான். அந்த ஆம்புலன்ஸில் எதிரியை அழைத்துச் சென்றுவிட்டார்கள் என்றால் தெரியாது. சம்பவ இடத்திலிருந்து எதிரி எப்படி சென்றார் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். சரண்யா அன்றைய தினம் என் அம்மாவின் போனுக்குதான் போன் செய்தார். அவ்வாறு போன் செய்தார் என்பதை காட்டுவதற்கு என் அம்மாவின் தொலைபேசி எண், சரண்யாவின் தொலைபேசி எண் ஆகியவற்றை வாங்கிக்கொண்டார்களா என்றால் வாங்கிக்கொண்டார்கள். அன்றைய தினம் என் அப்பாவை எங்கு வைத்து பார்த்தோம் என்றால், ஆசாரி சந்திற்குள் என் அப்பாவை எதிரி துரத்திக்கொண்டு செல்லும்போது பார்த்தோம். அதற்கு முன்பு என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கும் என் அம்மாவிற்கும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் அப்பா குப்புர தான் விழுந்தார். ஆனால், எதிரி வெட்டும்போது என் அப்பா திரும்பிவிட்டார். குப்புர விழுந்தபொழுது முதுகில் எதிரி வெட்டிவிட்டார். அந்த இடம் சிமெண்ட் ரோடுதான். அந்த சிமெண்ட் ரோட்டில் ரத்தக்கறை இருந்தது. போலீசார் ஆம்புலன்ஸ் வந்து முக்கால் மணி நேரத்தில் வந்துவிட்டார்களா என்றால், அம்மா புகார் கொடுத்த பிறகுதான் வந்தார்கள். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தபொழுது 9 அல்லது 9.30 மணி இருக்கும். அங்கு போலீசார் என்னையும் என் அம்மாவையும் விசாரித்தார்கள் என்றால் சரிதான். போலீசார் வந்து பத்து நிமிடத்தில் பிரேதத்தை எடுத்து சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல, இரவு பத்து அல்லது பத்தேகால் மணி அளவில் எடுத்துச்சென்றுவிட்டார்கள். பிரேதத்தை போலீசார் சம்பவ இடத்திலிருந்து எடுத்து சென்ற பிறகு என் அம்மா எங்கே சென்றார் என்றால் காவல்நிலையம் சென்றார். என் அம்மா அன்று இரவு 12 மணிபோல் வீட்டிற்கு வந்தார். என்னை சம்பவ இடத்தில் வைத்து போலீசார் விசாரித்தபிறகு மீண்டும் விசாரிக்கவில்லை. தற்போது சொல்லும் வீடியோ குறித்து போலீசாரிடம் சொன்னேனா என்றால், என் அண்ணன் சொல்லியுள்ளார். .../

அவ்வாறு போலீசாரிடம் என் அண்ணன் சொன்னபோது அந்த வீடியோவை போலீசார் வாங்கிக்கொண்டார்களா என்றால் தெரியாது. சம்பவம் நடந்து ஒரு வருடம் கழித்துதான் அந்த வீடியோ குறித்து என் அண்ணனுக்கு தெரியவந்தது. நான் சம்பவ சமயத்தில் அங்கு இல்லை என்றாலும், சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், சம்பவம் குறித்து போலீசார் சொல்லி கொடுத்தபடி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/– M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

DEPOSITION OF WITNESS

**In the Court of the Principal District Judge, Tiruchirappalli.**

**Sessions Case No. 180/2024**

Prosecution Witness No. PW3

Chapter XXIII Code of Criminal Procedure

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name / பெயர் | : | **சரண்யா** | Caste / இனம் | : | |
| Father's/ Husband's Name தகப்பனார்/கணவர் பெயர் | : | | Calling / வேலை | : | |
| Village / கிராமம் | : | | Religion / மதம் | : | |
| Taluk / வட்டம் | : | | Age / வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 04.07.2025.

(Accused Present)

**முதல்விசாரணை** :

நான் பெருமாள்பாளையத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 11.03.2024—ஆம் தேதி மாலை 7.10 மணி அளவில் நான் நாயுடு தெருவில் நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி இருசக்கர வாகனத்தில் வந்தவர் வண்டியை கீழே போட்டுவிட்டு ஓடினார். அவரை துரத்திக்கொண்டு பின்னாள் சந்திரசேகர் ஓடினார். அவ்வாறு ஓடியவர்கள் ஆசாரி தெருவுக்குள் சென்றுவிட்டனர். உடனே நான் கிருஷ்ணமூர்த்தி மனைவி கலைச்செல்விக்கு போன் செய்து சொன்னேன். கலைச்செல்வியும் அவரது மகள் சுபநந்தினியும் ஓடிவந்தார்கள். நானும் நாயுடு தெருவில் இருந்து ஆசாரி தெருவிற்கு ஓடினேன். கலைச்செல்வியும் சுபநந்தினியும் முன்பே வந்துவிட்டார்கள், நான் ../

சென்று பார்த்தபொழுது எதிரி அங்கு கொடுவாளுடன் நின்று கொண்டிருந்தார். கிருஷ்ணமூர்த்தி கீழே வெட்டுப்பட்டு கிடந்தார். நான் பார்த்தபொழுது கிருஷ்ணமூர்த்தியை சந்திரசேகர் நெத்தியில் வெட்டினார். கலைச்செல்வியையும், சுபநந்தினியையும் கிட்டே வரக்கூடாது என்று மிரட்டினார். என்னையும் மிரட்டினார். அதன்பிறகு 108–க்கு கால் செய்து ஆம்புலன்ஸ் வந்தது. வந்தவர்கள் சோதித்து பார்த்துவிட்டு இறந்துவிட்டார் என்று சொன்னார்கள். அதன்பிறகு, கலைச்செல்வி புகார் கொடுத்தார். போலீசார் விசாரித்தார்கள். அதன்பிறகு, ஆம்புலன்ஸ் வந்து பிரேதத்தை எடுத்துச் சென்றுவிட்டார்கள். என்னிடம் காட்டப்படும் கொடுவாள்தான் அன்றைய தினம் எதிரி வைத்திருந்தது.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை :</u>

தற்போது சொன்ன விவரத்தைதான் போலீஸ் விசாரணையின்போதும் சொன்னேன். நான் 7.10 மணி அளவில் நாயுடு தெருவில் நின்றுகொண்டிருந்தபொழுது கிருஷ்ணமூர்த்தி தான் வந்த இருசக்கர வாகனத்தில் கீழே போட்டுவிட்டு ஓடினார் என்று தற்போது சொன்ன விவரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அதேபோல் எதிரி நான் பார்த்தபொழுது கிருஷ்ணமூர்த்தியை நெத்தியில் வெட்டினார் என்று தற்போது சொன்ன விவரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். துறையூரிலிருந்து நரசிங்கபுரம் செல்லும் சாலையில் மேற்குபுறமாக என் வீடு உள்ளது என்றால் சரிதான். எனக்கும் என் கணவருக்கும் கிருஷ்ணமூர்த்திதான் காதல் திருமணம் செய்துவைத்தார் என்றால் சரிதான். அதனால் நான் கிருஷ்ணமூர்த்தி குடும்பத்துடன் நெருக்கமாக இருப்பேன் என்றால் சரிதான். நான் கலைச்செல்விக்கு போன் செய்தேன் என்பதை நிரூபிப்பதற்கு என்னுடைய போன் நம்பர், கலைச்செல்வி போன் நம்பர் போலீசார் வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரிதான். நாயுடு தெரு என்பது நெருக்கமாக இரண்டு பக்கமும் வீடு உள்ள தெரு என்றால் சரிதான். அன்பு பீட்டர் வீடு பூட்டு போட்டிருந்தது. மற்ற வீட்டில் ஆட்கள் இருந்தார்களா என்று எனக்கு தெரியாது. நாயுடு தெருவில் எந்த இடத்தில் இருந்து நான் அந்த சம்பவத்தை பார்த்தேன் என்று../

போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் பார்த்தபொழுது அன்பு பீட்டர் வீட்டின் அருகே நடுரோட்டில் வண்டியை போட்டுவிட்டு ஓடினார் என்றால் சரிதான். வண்டியில் பால் கேன் இருந்தது. வாங்கி வந்த பொருட்கள் கீழே விழுந்து சிதறியது என்றால் சரிதான். காய்கறிகள்தான் வாங்கி வந்தார். அந்த பால் கேன், கீழே கிடந்த வண்டி, காய்கறி ஆகியவற்றை போலீசார் பார்த்தார்களா என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் கால் மணி நேரத்திலிருந்து அரை மணி நேரம் வரை நடந்திருக்கும். அன்றைய தினம் எதிரிக்கும் தலையில் ரத்தக்காயம் இருந்ததா என்றால் சரிதான். ஆஜர் எதிரி கிருஷ்ணமூர்த்திக்கு அருகே நின்றுகொண்டிருந்தாரா என்றால் நின்றுகொண்டிருந்தார். எதிரி அந்த இடத்தில் ஐந்து நிமிடம்தான் நின்றுகொண்டிருந்தார். ஆம்புலன்ஸ் வந்தபொழுது மணி எட்டு இருக்கும். போலீசார் 9.30 மணிக்கு வந்தார்கள். சிமெண்ட் ரோட்டில் ரத்தக்கறை இருந்ததா என்றால் இருந்தது. அன்பு பீட்டர் வீட்டிற்கு அருகே ரத்தக்கறை இல்லை. கலைச்செல்வி எவ்வாறு காவல்நிலையம் சென்றார் என்று எனக்கு தெரியாது. போலீசார் சம்பவ இடத்திற்கு 9.30 மணிக்கு வந்தபொழுது என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள், அதன்பிறகு என்னை விசாரிக்கவில்லை. நான் முதல்விசாரணையில் சொல்வதுபோல் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. அன்றைய தினம் நான் கலைச்செல்விக்கு போன் போட்டு சொன்னது பொய் என்றாலும் சரியல்ல. கலைச்செல்வி குடும்பம் எனக்கு நெருக்கமான குடும்பம் என்பதால், அவர்கள் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/– M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

DEPOSITION OF WITNESS

**In the Court of the Principal District Judge, Tiruchirappalli.**

**Sessions Case No. 180/2024**

Prosecution Witness No. PW4

Chapter XXIII Code of Criminal Procedure

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name / பெயர் | : | **வினோத்குமார்** | Caste / இனம் | : | |
| Father's/ Husband's Name தகப்பனார்/கணவர் பெயர் | : | | Calling / வேலை | : | |
| Village / கிராமம் | : | | Religion / மதம் | : | |
| Taluk / வட்டம் | : | | Age / வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 04.07.2025.

(Accused Present)

**முதல்விசாரணை** :

நான் பெருமாள்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். இறந்துபோன கிருஷ்ணமூர்த்தியை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும் . அவர் கிருஷ்ணமூர்த்தியின் தம்பி. சாட்சி சொன்ன கலைச்செல்வி மற்றும் மற்ற இரண்டு சாட்சிகளையும் தெரியும். 11.03.2024–ஆம் தேதி இரவு 7.15 மணிக்கு நான் நண்பர்களுடன் பெருமாள்பாளையம் புராதனத் தெருவில் நின்றுகொண்டு பேசிக்கொண்டிருந்தேன். அப்பொழுது, கிருஷ்ணமூர்த்தியை சந்திரசேகர் வெட்டிவிட்டதாக சொல்லி எல்லோரும் அங்கு ஓடினார்கள். நானும் அங்கு ஓடினேன். நான் போய் பார்த்தபொழுது ஆசாரி சந்தில் கிருஷ்ணமூர்த்தி வெட்டுபட்டு கிடந்தார். சந்திரசேகர் கையில் அரிவாளுடன் நின்றுகொண்டிருந்தார். நான் பார்த்தபொழுது அவருக்கு உயிர் இல்லை. ../

108 ஆம்புலன்ஸ் வந்து அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். சிறிது நேரம் கழித்து போலீசார் வந்தார்கள். என்ன நடந்தது என்று கேட்டார்கள் சொன்னேன் கையெழுத்து போடு என்று சொன்னார்கள் போட்டேன். நான் பார்த்தபொழுது கிருஷ்ணமூர்த்திக்கு கழுத்து, காது, வயிறு ஆகிய பகுதியில் வெட்டுப்பட்டு ரத்தம் வந்தது.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை :</u>

நான் தற்போது முதல்விசாரணையில் சொன்ன விவரத்தைதான் போலீஸ் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். நான் சம்பவத்தின்போது பெருமாள்பாளையம் பிரதான சாலையில் நின்றுகொண்டு நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தபொழுது, வெட்டுப்பட்டதாக கேள்விப்பட்டு அங்கு சென்றேன் என்று தற்போது சொன்ன விவரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். கிருஷ்ணமூர்த்தியும், சந்திரசேகரும் என் அம்மாவுடன் பிறந்த சகோதரர்கள் இல்லை என்றால் சரிதான். நான் போலீஸ் விசாரணையின்போது, அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் போய் பார்த்தபொழுது அந்த ஊர்க்காரர்கள் கூட்டம் அதிகமாக இருந்தது என்றால் சரிதான். எதிரியும் அங்குதான் இருந்தார். போலீஸ் அங்கு வரும்வரை அங்குதான் இருந்தார் என்றால் சரிதான். எதிரி அன்றைய தினம் ரத்தக்காயத்துடன் சட்டைகள் ரத்தத்துடன் இருந்தார் என்றால் சரிதான். அவரை போலீசார் ஆம்புலன்ஸ்–இல் ஏற்றி அனுப்பிவிட்டார்கள் என்றால், நான் அனுப்பியபோது இல்லை. நான் போய் பார்த்து ஒரு மணி நேரத்தில் போலீசார் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். போலீசார் வந்து பத்து நிமிடத்தில் பிரேதத்தை ஆம்புலன்ஸில் எடுத்துச் சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். போலீசார் அங்கு வந்தபோது என்னை விசாரணை செய்தார்கள். அதன்பிறகு, என்னை விசாரணை செய்யவில்லை. அ.த.சா.1 குடும்பத்தினர் எனக்கு ../

வேண்டியவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> : இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/– M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.